**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்**

**முன்னிலை :திரு.S.தினேஷ்குமார், B.A., B.L.,**
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 68/2025**

**(CNR No. TNNM02-000327-2025)**

தமிழக அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளார்,
மாவட்ட குற்றப் பிரிவு,
நாமக்கல் மாவட்டம்.
குற்ற எண்.03/2023. - குற்றமுறையீட்டாளர்

// எதிராக //

குமார்,
த/பெ. பழனியாண்டி,
24 A/19 A குப்பநாயக்கனூர்,
பட்டையத்தன் குட்டை,
சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

.... எதிரி

| **குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண். | பெயர் | தந்தை/கணவரின் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1. | குமார் | பழனியாண்டி | --- | நாமக்கல | --- |

| நிகழ்வு | முறையீடு | கைதுஅல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணையின் தொடக்கம் | விசாரணை முடிவு | தண்டனை அல்லது ஆணை | தாமத்திற் கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 21.04.2016 | 06.05.2023 | --- | 04.03.2026 | 08.06.2026 | 11.06.2026 | விடுதலை | -- |

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C. No.814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்றம் காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | --- |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 20.02.2025 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்க மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | -- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 26.05.2026 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | ---- |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.2 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.3 | 11.06.2026 | 11.06.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 16.06.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்டநாள் | ---- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கானது கடந்த 20.02.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 16.06.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Ra.அய்யாவு அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 406, 420–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதியறிக்கையின் படி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

**(1.1)** நிகழ்நிலை புகார்தாரர் காயத்ரி ஃபைனான்ஸ் என்ற பெயரில் ஒரு நிதிநிறுவனத்தை நடத்தி வருவதாகவும், நிதி நிறுவனம் அடமானத்தின் கீழ் மோட்டார் வாகனங்களுக்குக் கடன் வழங்குவதாகவும், எதிரி KA 16 B 1953 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட் லாரியின் உரிமையாளர் என்றும், வாடகை கொள்முதல் ஒப்பந்தத்தின் கீழ் ரூ.9,00,000/– கடனை மூன்று தவணைகளாகப் பெற்றதாகவும், 21.04.2016 அன்று ரூ.4,00,000/– 25.04.2016 அன்று ரூ.2,00,000/– மற்றும் 12.05.2016 அன்று ரூ.3,00,000/–மொத்தம் ரூ.9,00,000/– குறிப்பிட்ட தொகையானது நிதி நிறுவனத்தின் கணக்கிலிருந்து ஓரியந்தல் பேங்க் ஆஃப் காமர்ஸில் உள்ள எதிரியின் வங்கி கணக்கு எண்.14192011001251 க்கு மாற்றப்பட்டதாகவும், மேற்கண்ட பரிவர்த்தனை ஒப்பந்தத்தின் படி மேற்கொள்ளப்பட்டதாகவும், எதிரி 40 மாதங்களுக்கு ரூ.31,500/– செலுத்த வேண்டும் என்றும், எனவே எதிரி ரூ.9,00,000/– கடன் பெற்று 40 தவணைகளில் 6 தவணைகளை மட்டுமே செலுத்தியுள்ளதாகவும், எதிரி கடன் தொகையை திருப்பி செலுத்த தவறிய குற்றத்திற்காகவும், அடமான வாகனத்தையும் சட்டவிரோதமாக விற்றுள்ள குற்றத்திற்காகவும், எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 406, 420 ன் கீழ் தண்டிக்கப்படக்கூடியவர் என நாமக்கல் மாவட்ட குற்றப் பிரிவு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(1.2)** குற்ற இறுதியறிக்கை பரிசீலனைக்குப்பின் மேற்படி வழக்கு எண்ணில் எதிரிக்கு எதிராக 20.02.2025 இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. அழைப்பாணையை பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு குற்ற இறுதியறிக்கை மற்றும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**(1.3)** எதிரிக்கு போதிய காலஅவகாசம் வழங்கிய பின்பு இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 406, 420 ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு புரியும் படி தமிழ்மொழியில் குற்றச்சாட்டுகள் விளக்கி கூறி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினார்.

**2.** இவ்வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் சான்றாவணங்களிலிருந்தும் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

**(4.1)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 சம்பவம் பற்றியும், சம்பவத்தின் போது எதிரி தனது வாகனத்தை அடமானமாக வைத்து ஒப்பந்த பத்திரம் தயார் செய்து கொடுத்து கடனை பெற்றுக்கொண்டு, கடனை கொடுக்காமல் லாரியுடன் தலைமறைவாகிவிட்டது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஸ்ரீ காயத்ரி பைனான்ஸ் நிறுவனத்தின் வங்கியான பாரத ஸ்டேட் வங்கியில் இருந்து எதிரியின் வங்கியான பஞ்சாப் நேசனல் வங்கி கணக்கிற்கு கடன் கொடுக்கப்பட்டதற்கான, ஸ்ரீ காயத்ரி பைனான்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கின் பற்று வரவு அறிக்கை அ.சா.ஆ.1 ஆகவும், அடமானக் கடன் பத்திரம் அ.சா.ஆ.2 ஆகவும், எதிரி எழுதிக்கொடுத்த Hire Purchase Agreement Forms Book அ.சா.ஆ.3 ஆகவும், எதிரி ஸ்ரீ காயத்ரி பைனான்ஸ் நிறுவனத்திற்கு தவணைக்கட்டியதற்கான தவணை ரசீதுகள் நகல் (எண்ணிக்கை–5) அ.சா.ஆ.4 ஆகவும், புகார் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், அ.சா.1 ஐ தழுவி கூறும் சாட்சியாக அவரின் மேலாளர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.1ன் நிறுவனமான ஸ்ரீ காயத்ரி பைனான்ஸின் பதிவு சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. எதிரியை கு.வி.மு.ச 313 (1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313 (1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது அவற்றை எதிரிகள் பொய்சாட்சி என்று கூறியதோடு தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**5. ஆய்வுக்குரிய பிரச்சனை:–**

**(5.1)** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 406, 420 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

**6. தீர்வு:–**

**(6.1)** நிகழ்நிலை புகார்தாரர் காயத்ரி ஃபைனான்ஸ் என்ற பெயரில் ஒரு நிதி நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், நிதி நிறுவனம் அடமானத்தின் கீழ் மோட்டார் வாகனங்களுக்குக் கடன் வழங்குவதாகவும், எதிரி KA 16 B 1953 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்ட்டேர்ஸ் லாரியின் உரிமையாளர் என்றும், வாடகை கொள்முதல் ஒப்பந்தத்தின் கீழ் ரூ.9,00,000/– கடனை மூன்று தவணைகளாகப் பெற்றதாகவும், 21.04.2016 அன்று ரூ.4,00,000/– 25.04.2016 அன்று ரூ.2,00,000/– மற்றும் 12.05.2016 அன்று ரூ.3,00,000/–மொத்தம் ரூ.9,00,000/– குறிப்பிட்ட தொகையானது நிதி நிறுவனத்தின் கணக்கிலிருந்து ஓரியந்தல் பேங்க் ஆஃப் காமர்ஸில் உள்ள எதிரியின் வங்கி கணக்கு எண்.14192011001251 க்கு மாற்றப்பட்டதாகவும், மேற்கண்ட பரிவர்த்தனை ஒப்பந்தத்தின் படி மேற்கொள்ளப்பட்டதாகவும், எதிரி 40 மாதங்களுக்கு ரூ.31,500/– செலுத்த வேண்டும் என்றும், எனவே எதிரி ரூ.9,00,000/– கடன் பெற்று 40 தவணைகளில் 6 தவணைகளை மட்டுமே செலுத்தியுள்ளதாகவும், எதிரி கடன் தொகையை திருப்பி செலுத்த தவறிய குற்றத்திற்காகவும், அடமான வாகனத்தையும் சட்டவிரோதமாக விற்றுள்ளார் என்ற சங்கதிகளை நிரூபிக்கும் சுமை அரசு தரப்பிற்கு உள்ளது.

**6.2.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது முன் விசாரணை சாட்சியத்தில்  கடந்த 10 வருடங்களுக்கு முன்னர், எதிரி ஸ்ரீ காயத்திரி பைனான்ஸ் நிறுவனத்தில் அ.சா.1ற்கு சொந்தமான 10 சக்கர டாரஸ் வாகனத்தை அடமானம் வைத்து கடன் கேட்டதன் பேரில் ரூ.9,00,000/– கடனாக வங்கி வாயிலாக கொடுத்ததாகவும், அது குறித்து எதிரி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், 2, 3 மாதங்கள் மட்டும் எதிரி கடனை சரியாக செலுத்தியதாகவும்,  பின்னர் எதிரி வண்டியுடன் தலைமறைவு ஆகிவிட்டதாகவும், அதன் பிறகு வழக்கு புகாரினை தான் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.1யை ஒத்துரைத்து அ.சா.2 சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணையில் எதிரி தான் வாங்கி கடன் முழுவதையும் தங்கள் நிறுவனத்திற்கு கொடுத்து தீர்த்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள்.

**6.3.** புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திருமதி.தமிழ்செல்வி அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 06.05.2023 ம் தேதி மாலை 16.45 மணியளவில் நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது முன்னதாக மாண்புமிகு நாமக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற Crl.M.P.No.502/2022 Dt;05.07.2022உத்தரவுபடியும், நாமக்கல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் C.No.H2/202/DCB / NKL / 2022 Dt: 18.07.2022 மூலம் அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் கடந்த 29.07.2022 ம் தேதி மாவட்ட குற்றப்பிரிவில் மனு இரசீது எண்.6/2022 வழங்கப்பட்டு பரிசீலனையில் உள்ளதை நான் பார்வையிட்டு பரிசீலித்து ஆஜர் எதிரி மீது நிலையக்குற்ற எண். 3/2023 சட்டப்பிரிவுகள் 406, 420 இதச வின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை உரிய வழிமுறையின் படி சம்மன் அனுப்பி கடந்த 15.05.2023 ம் தேதி வரவழைத்து விசாரித்தும், பின்னர் கு.வி.மு.ச பிரிவு 41 A ன் கீழ் அவரை அனுப்பி வைத்ததாகவும்,  பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 பாலு, அ.சா.2 வரதராஜன், பட்டியல் சாட்சி–3 பழனிசாமி ஆகியோரை 10.12.2024 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு சம்மந்தமான ஆவணங்களை பெற்றதாகவும், பின்னர் 16.10.2024 ம் தேதி பஞ்சாப் நேசனல் வங்கி மேலளார் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி

மேலாளருக்கு எதிரி மற்றும் புகார்தாரர் வங்கியின் பரிவர்த்தனை கேட்டு வேண்டுகோள் கடிதம் வைத்ததாகவும், பின்னர் 30.12.2024 ம் தேதி மேற்படி மேலாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆவணங்களை பெற்றதாகவும், அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது இ.த.ச. பிரிவு 406, 420 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்.

**6.4.** மேற்படி அ.சா.1, அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணையில் எதிரி பணம் முழுவதையும் செலுத்திவிட்டதாகவும், அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடர வேண்டாம் எதுவும் சாட்சியமளித்துள்ள நிலையில், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 ன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டதாக கருத முடியாது.

**7.1.** மேலும், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 420–ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், பரிவர்த்தனை நடைபெற்ற ஆரம்பத்திலிருந்தே எதிரிக்கு ஏமாற்றும் நோக்கம் (dishonest intention at the inception of the transaction) இருந்தது என்பதை அரசு தரப்பு உறுதியான சாட்சிகளின் மூலம் நிரூபிக்க வேண்டும். அதேபோல், பிரிவு 406–ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், ஒப்படைக்கப்பட்ட சொத்தை எதிரி நேர்மையற்ற முறையில் கையாடல் செய்தார் அல்லது சட்டவிரோதமாக தனதாக்கிக் கொண்டார் என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும்.

**7.2** நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி தனது நிதி நிறுவனத்தில் லாரியை அடமானம் வைத்து ரூ.9,00,000/– கடன் பெற்றதாகவும், சில மாதங்கள் மட்டும் தவணை செலுத்திய பின்னர் வாகனத்துடன் தலைமறைவானதாகவும் தெரிவித்துள்ளார். அ.சா.2–வும் இதனை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். ஆனால், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் முழு சாட்சியங்களையும் பரிசீலிக்கையில், எதிரி கடன் பெற வந்த நேரத்திலேயே அவருக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லை அல்லது ஆரம்பத்திலிருந்தே புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டார் என்றவாறு அ.சா.1, அ.சா.2 சாட்சியமளிக்கவில்லை. வெறுமனே கடன் பெற்று பின்னர் தவணைகளைச் செலுத்தத்

தவறியதோ அல்லது ஒப்பந்த நிபந்தனைகளை மீறியதோ மட்டும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 420–ன் கீழ் குற்றமாகாது. உரிமையியல் தன்மை கொண்ட ஒப்பந்த மீறலை மட்டும் குற்றவியல் ஏமாற்றாகக் கருத இயலாது.

**7.3.** மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணையில், எதிரி வாங்கிய கடன் தொகையை முழுமையாகத் தங்களது நிறுவனத்திற்கு செலுத்திவிட்டதாகத் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த ஒப்புதல் அரசு தரப்பு வழக்கின் அடிப்படையையே பாதிக்கின்றது. கடன் தொகை முழுமையாக வசூலிக்கப்பட்டதாக புகார்தாரரே ஒப்புக்கொண்ட நிலையில், எதிரி நேர்மையற்ற முறையில் சொத்தை அபகரித்தார் அல்லது புகார்தாரருக்கு நிரந்தர நஷ்டம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டார் என்று முடிவு செய்ய இயலாது. ஆகவே, எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 420 ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**7.4.** அரசு தரப்பு வழக்கில், அடமான வாகனம் சட்டவிரோதமாக விற்கப்பட்டதாக கூறப்பட்டிருந்தாலும், அதனை நிரூபிக்கும் வகையில் எந்தவொறு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இதனால், அடமான வாகனத்தை எதிரி சட்டவிரோதமாக விற்றார் என்ற எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 406 ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**7.5.** மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி இ.த.ச பிரிவுகள் 406, 420 ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.** இறுதியாக, எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 406, 420–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லை என

இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணை முறிவு பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 16 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–S.தினேஷ்குமார்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**அட்டவணை :**

**அரசுத்தரப்பு சாட்சிகள் :**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பாலு |
| அ.சா.2 | திரு.வரதராஜன் |
| அ.சா.3 | திருமதி.தமிழ்ச்செல்வி |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :**

| சான்றாவணங்களின் வரிசை | நாள் | சான்றாவணங்களின் விபரம் | குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.12.2024 | ஸ்ரீ காயத்ரி பைனான்ஸ நிறுவனத்தின் வங்கியான பாரத ஸ்டேட் வங்கியில் இருந்து எதிரியின் வங்கியான பஞ்சாப் நேசனல் வங்கி கணக்கிற்கு கடன் கொடுக்கப்பட்டதற்கான வங்கி கணக்கின் பற்று வரவு அறிக்கை | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | --- | அடமானக் கடன் பத்திரம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 12.05.2016 | எதிரி எழுதிக் கொடுத்த Hire Purchase Agreement Forms Book | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.4 | --- | ஸ்ரீ காயத்ரி பைனான்ஸ நிறுவனத்திற்கு தவணைக் கட்டிதற்கான தவணை ரசீதுகள் நகல் (எண்ணிக்கை-5) | அ.சா.1 |
| அ.சா.ஆ.5 | 10.12.2021 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.6 | 06.05.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 27.01.2025 | புகார்தாரரின் நிறுவனமான ஸ்ரீ காயத்ரி பைனான்ஸின் பதிவு சான்று | அ.சா.3 |

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** : இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றுப்பொருள்</u>** : இல்லை.

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை.

(ஒம்/-S.தினேஷ்குமார்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**<u>குறிப்பு</u>**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

1) மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.